


மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேலக்கோட்டையில் கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி வாக்காளர் பட்டியல் சீர்திருத்த பணிகள் மற்றும் தேர்தல் பணிகள் குறித்து கழகத்தினருக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் வக்கீல் பாலாஜி, லதா அதியமான், டிஸ்கோ அலாவுதீன், இளமகிழன், செல்லம்பட்டி முத்துராமன், முத்துராமலிங்கம், ஞானசேகரன், சிவனாண்டி, கொ.தனபாண்டி, தங்கப்பாண்டியன், ஆதிமூலம், ஸ்ரீதர், மதன்குமார், சுதாகரன், அஜித்பாண்டி, எஸ்.ஓ.ஆர். தங்கப்பாண்டியன், ரம்யா முத்துக்குமார், கீர்த்திகா தங்கபாண்டியன், ராமமூர்த்தி, கிருஷ்ணபாண்டியன், உசிலை சிவா, ஆதவன் அதியமான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - அ.சுபேர்கான் பங்கேற்பு

# சிறுபான்மை மக்களின் காப்பான் தி.மு.க. - திருவாரூரில் கருத்தரங்கம்!

## நவாஸ்கனி எம்.பி.- பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவாரூர்,அக்13-

திருவாரூரில் திமுக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் சிறுபான்மைஇன மக்களின் காப்பான் திமுக எனும் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.எஸ்.எம்.நாசர், பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வக்பு வாரிய தலைவர் நவாஸ்கனி , மாநில செயலாளர் அ.சுபேர்கான் உள்ளிட்டோர் பங்கேற்று கருத்துரை வழங்கினர்.

“சிறுபான்மைஇன மக்களின் காப்பான் திமுக” எனும் தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.ஆர்.தாஜுதீன் வரவேற்புரை வாசித்தார். மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் அ.சுபேர்கான் ஆகியோர் தலைமையுரையாற்றினார்.

மாநில துணை தலைவர் ஜோசப்ராஜ் , மாநில செயலாளர்கள் பூவை. ஜெரால்ட், அன்வர்கான், நூருல்லா,முனைவர் ஜான், கா.ரபி அஹமது, அன்வர் அலி, ராபர்ட் இராஜதுரை, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, விஜயகுமார், சபீல் கான் ,சாகுல் ஹமீத், எஸ்.டி.ஆர்.பொன்சீலன், இராஜேஷ் ஜெயின் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

கருத்தரங்கில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி எஸ்.எம். நாசர் பங்கேற்று திமுக அரசு அன்றும், இன்றும் சிறுபானமையின மக்களுக்கு செய்து தந்த சாதனை திட்டங்களை பட்டியலிட்டு பேசியதோடு , ஒன்றிய அரசு மூலம் சிறுபான்மையின மக்களுக்கு வரும் இன்னல்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தடுத்து, மக்களை கண்ணென காத்துவருவதாக குறிப்பிட்டு பேசினார்.

நிகழ்சியை தஞ்சை தெற்குமாவட்ட செயலாளர் ஷாகுல் ஹமீது, மத்திய மாவட்ட அமைப்பாளர் தனிஸ்லாஸ், நாகைமாவட்ட ஷாகுல் ஹமீது சாகிப், மயிலாடுதுறை மாவட்ட அமைப்பாளர் சம்சுதீன் ஆகியோர் ஒருங்கிணைத்து வழங்கினர்.

தஞ்சை வடக்கு மாவட்ட அமைப்பாளர் பாவை.அனீபா நன்றி கூறினார்.

இந்த கருத்தரங்கில் மாவட்ட துணைத்தலைவர் எம்.செபேஷ் ரோலி, துணை அமைப்பாளர்கள் ஒய்.ஏ.நவாப்தீன், ஜெ.நவாஸ் கான்,எஸ்.அல்அமீன், எஸ்.ஷாஜகான், எஸ்.நயினார் முகம்மது ஒன்றிய கழக செய லாளர்கள் புலிவலம் ஏ.தேவா, இரா.மனோகரன், ப.பிரகாஷ், நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன், எஸ்.வில்லியம் ராஜ் உள்ளிட்ட ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், திருவாரூர், தஞ்சை நாகை மாவட்ட சிறுபான்மை அணியினர் உள்ளிட்ட பெருந்திரளானோர் பங்கேற்றனர்.




தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் தாலுகா, ஆர்.வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு விவசாயப்பணியில் இருந்த முருகேசன் என்பவரை காட்டுப்பன்றி தாக்கியது. காட்டுப்பன்றி தாக்கிய முருகேசன் எட்டையாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்கண்டேயன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். உடன் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதகண்ணன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமையில் ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், துணை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் கண்ணன், உதவி ஆணையாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், அயன்பொம்மையாபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து கேட்டறிந்தபின் மரக்கன்று நட்டார். மேலும் போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்கள். கூட்டத்தில் ஐஸ்வர்யா, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



அமெரிக்க அயலக அணி தெற்கு மண்டலத்தின் ஏற்பாட்டில், கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் வீ.கண்ணதாசன். மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி மற்றும் மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் தமிழ்நாடு முழுநேர உறுப்பினர் அ.முகமது ஜியாவுதீன் ஆகியோர் கலந்துகொண்டு, அயலக வாழ் தமிழ் மக்களுடன் கலந்துரையாடினர்.

### 2026 பிப்ரவரி மாதத்திற்குள் திருக்கோயில்களில் 5 ஆண்டுகள்

# தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 1,500 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக்.13-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு நேற்று முன் தினம் (11.10.2025) சென்னை, பிராட்வே, இராஜா அண்ணாமலை மன்றத்தில் தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர் யூனியன் சார்பில் நடைபெற்ற மாநில சிறப்பு மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டினை தொடங்கி வைத்து சிறப்புரை யாற்றினார்.

இம்மாநாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசியதாவது,

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பின்னர், இந்த ஆட்சி ஆன்மிகத்திற்கும், இறையன்பர்களுக்கும் எதிரான ஆட்சி என்ற பிம்பத்தை கட்டமைக்க முயற்சித்தவர்களின் எண்ணங்களை அடித்து நொறுக்கி சுக்குநூறாக்கி, இந்த ஆட்சி எல்லோருக்குமான ஆட்சி என நிரூபித்து காட்டியவர் முதலமைச்சர் அவர்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது கொரோனா என்ற கொடிய தொற்றின் தாக்குதலிருந்து மக்களை காக்க அனைத்து அமைச்சர்களையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களை போல் பணியாற்ற வைத்து, கொரோனா தொற்று காலத்தில் நிவாரண உதவி வழங்குகின்ற கோப்பில் முதன்முதலில் கையெழுத்திட்டவர் நமது முதலமைச்சர் ஆவார்.

இந்த ஆட்சியின் சிறப்பையும், துறையின் சாதனைகளையும் இங்கு எல்லோரும் எடுத்து கூறினார்கள். இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் கொரோனா காலத்தில் அர்ச்சர்களுக்கு உதவித்தொகையாக ரூ.4000/ மற்றும் ஒரு மாதத்திற்கான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆணுக்கு பெண் இளைப்பில்லை என்ற வரிகளுக்கேற்ப இந்த அரசு பொறுப்பேற்றபின் நியமிக்கப்பட்ட 46 ஓதுவார்களில் 12 பேர் பெண்கள் பெருமைக்குரியதாகும். இது தந்தை பெரியாரின் கனவு, அதை நனவாக்கிவார் வாழும் பெரியார் முதலமைச்சர் அவர்கள் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகின்றேன்.



இந்த ஆன்மிக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 3,707 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ரூ. 8,000 கோடி மதிப்பிலான திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுள்ளோம். இந்து சமய அறநிலையத்துறையின் பல்வேறு திட்டங்களுக்கு இந்த ஆட்சியில் தான் ரூ. 1,200 கோடி அரசு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கோயில் நிதியை அரசு பயன்படுத்திய நிலைமாறி, இந்த ஆட்சியில்தான் திருக்கோயி ல்களுக்கு அரசு நிதி இந்த அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் திருக்கோயில்களின் திருப்பணிக்கு உயதாரர்கள் மட்டும் ரூ. 1,502 கோடியை முன்வந்து அளித்துள்ளனர். இது இந்த ஆட்சியின் நேர்மைக்கும், செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. திருக்கோயில்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றியவர்களை வரன்முறைப்படுத்த கடந்த ஆட்சியில் அறிவிப்பு செய்திருந்தாலும், அதனை செயல்படுத்தவில்லை. ஆனால் திராவிட மாடல் அரசின் நான்காண்டுகளில் 1,351 பணியாளர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளனர். கூடுதலாக வரும் பிப்ரவரி மாதத்திற்குள் 5 ஆண்டுகள் தொகுப்பூதியத்தில் பணியாற்றியுள்ள 1,500 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதனை முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

இதுபோன்ற பல்வேறு பணியாளர்களின் மாநாடுகளில் நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள் பட்டியல் போல் நீண்டு இருக்கும். இந்து சமய அறநிலையத்துறையில் பணியாளர்கள் மன நிறைவோடு இருக்கின்றார்கள் என்பதற்கு இம்மாநாட்டு குழுவினர் அளித்து 6 கோரிக்கைகளே சாட்சியாக அமைந்துள்ளது. உங்களது கோரிக்கைகளாக யூனியனுக்கு அலு வலகம், வீட்டு வாடகைப்படி உயர்வு, திருக்கோயில்களின் வருமானத்தில் 40 சதவீதம் சம்பள செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதை பொது நிதியாக ஏற்படுத்தி அதன்மூலம் திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல் போன்ற கோரிக்கைகளை துறை செயலாளர் மற்றும் ஆணையரிடம் கலந்து பேசி, முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று தீர்வு எட்டப்படும். திருக்கோயில் வருமானத்தில் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் விகிதம் 20 சதவீதம் என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றபின் அந்தந்த திருக்கோயில்களின் செலவினத்திற்கு ஏற்றாற்போல் 25 முதல் 35 சதவீதம் வரை உயர்த்தியுள்ளோம். எந்த ஒரு பணியாளரும் பணிக்கேற்ற ஊதியம் இல்லாமல் பணியாற்றமாட்டார்கள் என்ற உறுதியை வழங்குகின்றேன்.

பைபிளில் கூறப்பட்டுள்ள கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வரிகளுக்கேற்ப கேட்காமலே கொடுக்கின்ற மனம், கேட்டதெல்லாம் தருகின்ற குணம் கொண்ட முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் இறைவனும் மகிழ்ச்சியோடு இருப்பான், இறைவனுக்கு தொண்டு செய்யும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள் என்று தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தவத்திரு குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார், ஆன்மிக சொற்பொழிவாளர் சுகிசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் பி. ஸ்ரீராமுலு, தொழிலாளர் யூனியனின் மாநிலத் தலைவர் ஜெ.குமார், பொதுச் செயலாளர் க.இரமேஷ்குமார், நிர்வாகிகள் இரா.இரமேஷ், அ.முத்து சாமி, வி.கண்ணன், சு.தனசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட னர்.

# அமெரிக்க வாழ் தமிழர்களுடன் கலந்துரையாடல்!

வாஷிங்டன், அக். 13 -

அமெரிக்க அயலக அணி தெற்கு மண்டலத்தின் ஏற்பாட்டில், டெக்ஸாஸ் நேரப்படி இன்று மாலை 7 மணி அளவில் ஒரு சிறப்பான சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் வீ. கண்ணதாசன், மேலும் மேனாள் மாவட்ட அமர்வு நீதிபதி மற்றும் மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் தமிழ்நாடு முழுநேர உறுப்பினர் மதிப்பிற்குரிய அ.முகமது ஜியாவுதீன் கலந்துகொண்டு, அயலக வாழ் தமிழ் மக்களுடன் கலந்துரையாடினர்.

தமிழ்நாட்டின் சட்டங்கள், மனித உரிமைகள் மற்றும் சட்ட ஆட்சி மொழி குறித்த பல முக்கிய தகவல்களை அமெரிக்க வாழ் இந்திய மக்களுடன் பகிர்ந்து கொண்ட னர்.

தமிழ்நாட்டின் சட்ட விழிப்புணர்வுப் பணிகளின் முக்கியத்து வத்தை அயலகத் தமிழர்கள் மத்தியில் எடுத்துரைக்கும் விதமாக இந்த கலந்துரையாடல் நிகழ்வு அமைந்தது.

இந்தச் சந்திப்பினை, தெற்கு மண்டல அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளருடன் இணைந்து, மேற்கு மண்டல அமைப்பாளரும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

அயலகத் தமிழர்கள் மத்தியில் தமிழ்நாட்டின் சட்ட மற்றும் மனித உரிமை சார்ந்த விஷயங்களைப் பற்றி அறிந்து கொள்ள இந்த வாய்ப்பு மிகுந்த பயனுள்ளதாக இருந்தது என்று அமெரிக்க வாழ் தமிழர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. மனோகரன்

**அக்டோபர் 13 (2020)**



**1986ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பொறுப்புகளை வகித்தவர்.**

**1989ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அத்தொகுதிக்கு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**